# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

## தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம்

Regd. No. 124/MDS (Recognised)

(Affiliated to All India Federation of Power Diploma Engineers)

144, Electricity Avenue, Anna Salai, Chennai - 600 002.

44, Ramasamy Garden Street, Royapetah, Chennai - 600 014.

Phone : 28521968, E-mail : tnebes@yahoo.co.in

| PRESIDENT | GENERAL SECRETARY | TREASURER |
|---|---|---|
| **Er. A.ANTONYPADOVARAJ** | **Er. V. ASHOKKUMAR** | **Er. R.BADRINARAYANAN** |
| 94438 72166 | 94442 13621 | 96001 49791 |


பெறுதல்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குனர்,**
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
சென்னை–600 002.

க.எண்.பொ.செ./த.மி.வா.பொறியாளர் சங்கம்/கோ.எண்.1/ தீர்மானம் எண்.21 /தேதி 1.12.2016.

ஐயா,

பொருள்: தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கம் – 50வது மாநில பொதுக்குழு மற்றும் மாநில செயற்குழு தீர்மானம் – பொதுவியல் பட்டயம் பெற்று உரிய பதவிகள் இல்லாததால் கீழ்நிலை பதவிகளிலேயே 20 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரியும் பொதுவியல் பட்டயப் பொறியாளர்களுக்கு தொழில்நுட்ப உதவியாளர் (பொதுவியல்) பதவிகள் வாரியம் ஏற்றுக்கொண்டபடி வழங்கிட வேண்டுதல் – தொடர்பாக.

பார்வை: 1. மாநில பொதுக்குழு தீர்மானம் கடித நாள் 21.07.2016.
2. மாநில செயற்குழு நாள் 26.11.2016.

---

தமிழ்நாடு மின்சார வாரிய பொறியாளர் சங்கத்தின் 50வது மாநில பொதுக்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானத்தின் மீது வாரியம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டி மாநில செயற்குழு கூட்டத்தில் மீண்டும் வலியுறுத்தப்பட்டு தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது.

**தீர்மானம்–21**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பட்டயக்கல்வி பெற்றவர்கள் தொழில்நுட்ப உதவியாளர்களாக பணிநியமனம் செய்யப்படுகின்றனர். மின்னியல், இயந்திரவியல் பிரிவுகளில் மட்டுமே தொழில்நுட்ப உதவியாளர் பதவிகள் அனுமதிக்கப்பட்டுள்ளது. **தொழில்நுட்ப உதவியாளர் பதவி பொதுவியல் பிரிவில் அனுமதிக்கப்படவில்லை. இதனால் பொதுவியல் பட்டயம் பெற்றவர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக கீழ்நிலை பணிகளிலேயே பணிபுரிந்து வருகின்றனர்.**

Continuation Sheet

# Tamil Nadu Electricity Board Engineers' Sangam

இவர்களோடு வாரியப் பணியில் சேர்ந்த மின்னியல், இயந்திரவியல் பட்டயப் பொறியாளர்கள் இளநிலைப் பொறியாளர் முதல்நிலை, உதவி செயற் பொறியாளர் என்ற நிலைகளில் பணிபுரியும்போது இவர்கள் குறைந்தபட்ச தொழில்நுட்ப உதவியாளர் பதவி கூட பெற முடியாமல் பல ஆண்டுகளாக நியாயமற்று பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் சமுதாய அளவில் மிகுந்த பாதிப்பும், மன உளைச்சலும் அடைந்து வருகின்றனர்.

**கடந்த வேலைப்பளு ஒப்பந்தத்தை தொடர்ந்து உருவாக்கப்பட்ட நீர்மின்திட்ட குழு (Hydro Committee) இதனை பரிசீலித்து பொதுவியல் உபகோட்டங்கள், மின் கம்பங்கள் உற்பத்தி செய்யும் இடங்களில் தொழில்நுட்ப உதவியாளர் / பொதுவியல் பதவிகள் உருவாக்கிட பரிந்துரை செய்துள்ளது. வாரியம் இதனை ஏற்று செயல்படுத்திடுவதாக நீர்மின்திட்ட ஒப்பந்தம் ஏற்பட்டபோது அறிவித்துள்ளது. ஆனாலும் இதனை இதுவரை வாரியம் நடைமுறைப்படுத்தவில்லை.**

**23.02.2016 அன்று நடைபெற்ற கூட்டத்தில் தொழில்நுட்ப உதவியாளர் / பொதுவியல் பதவிக்கான உத்தரவு வழங்கிட தலைமைப் பொறியாளர் / பொதுவியல் வடிவமைப்பு அவர்களிடம் தகவல் (உபகோட்டங்கள், RCC / PSC yard எண்ணிக்கைகள்) கேட்கப்பட்டுள்ளதாக வாரியம் எழுத்து பூர்வமாக தெரிவித்துள்ளது.**

எனவே, வாரியம் பலமுறை ஏற்றுக்கொண்டபடி மின்னியல், இயந்திரவியல் போன்றே பொதுவியல் பிரிவிலும் தொழில்நுட்ப உதவியாளர் பதவி உருவாக்கி பட்டயப் பொறியாளர்களுக்கு மேலும் தாமதமின்றி நியாயம் வழங்கிட வாரியத்தை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி,

தங்கள் உண்மையுள்ள,

( வி. அசோக்குமார் )
பொதுச் செயலாளர்.

03/16

<u>நகல்</u>

இயக்குநர் / நிதி / த.மி.உ.மற்றும் ப.கழகம்.
செயலாளர் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
இயக்குநர் / விநியோகம் / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.
தலைமைப் பொறியாளர் / பணியமைப்பு / த.மி.உ.மற்றும் பகிர்மான கழகம்.